செ.வெ.எண். 36/செப்டம்பர் தேதி : 13.09.2016

**பென்னாகரம் வட்டம், பருவதனஅள்ளி கிராமத்தில் சூரிய ஒளி மூலம் இயங்கும் சோலார் பம்ப் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பார்வையிட்டார்.**



தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பருவதனஅள்ளி கிராமத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் சூரிய ஒளி மூலம் இயங்கும் சோலார் பம்ப் திட்டத்தின்கீழ் விவசாயி ஒருவரின் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள சோலார் பம்பை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து பின்னர் செய்தியாளர்களிடத்தில் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழக மின் தேவையை பூர்த்தி செய்ய மரபுசாரா எரிசக்தி திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் சிறப்புத்திட்டங்களில் ஒன்றான சூரிய ஒளி மூலம் இயங்கும் சோலார் பம்ப் திட்டத்தை 2014-15 ஆம் ஆண்டு முதல் வேளாண்மை பொறியியல் துறை மூலம் தமிழகத்தின் அனைத்து விவசாயி பெருமக்கள் பயனடையும் வகையில் 80% மானியத்தில் இந்த சீரிய திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள்.

இத்திட்டத்தின் மூலம் பென்னாகரம் வட்டம், பருவதனஅள்ளி கிராமத்தில் திரு. மாக்கான் என்ற விவசாயி தனது நிலத்தில் அமைந்துள்ள திறந்த வெளி கிணற்றில் சூரிய ஒளி மூலம் இயங்கும் 5 HP திறன் கொண்ட ஒரு சோலார் பம்ப் அமைக்க ரூ. 5 இலட்சத்து 1,512/- செலவாகிறது. இதில் விவசாயி செலுத்த வேண்டியது 20% ரூ. 1 இலட்சத்து 17 ஆயிரத்து 12 ஆகும். இவற்றிற்கு தமிழக அரசு 80% மானியமாக ரூ. 3 இலட்சத்து 84 ஆயிரம் பங்களிப்பு அளிக்கிறது. அதேபோன்று ஆழ்துளை கிணறுகளிலும் சோலார் பம்ப்பை அமைக்க செலவாகும் தொகை ரூ. 4,39,950/- ஆகும். அதில் 20% பங்களிப்பாக ரூ. 1,04,750/- செலுத்தி சோலார் பம்ப் அமைத்து விவசாய பெருமக்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த ஆண்டில் 10 HP திறன் கொண்ட மின் மோட்டார் சூரிய ஒளி மூலம் இயங்கும் சோலார் பம்ப் திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும் 500 எண்கள் முதல் கட்டமாக விரைவில் நிறுவப்படவுள்ளது. ஆகையால் இதுவரை மின்சக்தி பெறாத குக்கிராமங்களிலும் சுற்றுப்புற சூழல் மாசு ஏற்படாத வண்ணம் சூரிய ஒளி மூலம் தங்கு தடையின்றி இயங்கும் இந்த சோலார் பம்ப்பை அனைத்து விவசாய பெருமக்களும் வேளாண் பொறியியல் துறை அலுவலரை அணுகி பயன்பெற வேண்டுமென மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

---

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.தொ.மு. நாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு. டி.ஆர். அன்பழகன், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. பொன்னுவேல், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு. ராஜேந்திரன், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு. நம்பி, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திரு. அண்ணாமலை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.